7. அறிவிப்புகள்—*தொடர்ச்சி*

(எ) தமிழ்நாடு புரட்சித்தலைவி டாக்டர் ஜெ ஜெயலலிதா நினைவு அறக்கட்டளைச் சட்டமுன்வடிவு, 2020 (ஆ.இ.)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *பேரவைக்கு ஓர் அறிவிப்பு. 2020 ஆம் ஆண்டு தமிழ்நாடு புரட்சித்தலைவி டாக்டர் ஜெ ஜெயலலிதா நினைவு அறக்கட்டளைச் சட்டமுன்வடிவைப் பேரவையில் ஆய்வு செய்ய மேதகு ஆளுநர் அவர்கள் தமது இசைவைத் தெரிவித்துள்ளார்கள்.*

13. அரசினர் சட்டமுன்வடிவுகள் (ஆய்வு செய்தல்)—— *தொடர்ச்சி*

(அஊ) தமிழ்நாடு புரட்சித்தலைவி டாக்டர் ஜெ ஜெயலலிதா நினைவு அறக்கட்டளைச் சட்டமுன்வடிவு, 2020

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *2020 ஆம் ஆண்டு தமிழ்நாடு புரட்சித்தலைவி டாக்டர் ஜெ ஜெயலலிதா நினைவு அறக்கட்டளைச் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 45/2020), மாண்புமிகு செய்தி மற்றும் விளம்பரத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. கடம்பூர் ராஜு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

“2020 ஆம் ஆண்டு தமிழ்நாடு புரட்சித்தலைவி டாக்டர் ஜெ ஜெயலலிதா நினைவு அறக்கட்டளைச் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 45/2020)@ ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற வேண்டும்”

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு செய்தி மற்றும் விளம்பரத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.*

---

*@ **16-9-2020** ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில்* **வெளியிடப்பெற்றுள்ளது.**